சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.44/2024</u>

29.01.2026

வா.சா. 1 திரு.மோகன், த/பெ. சண்முகம்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நானும், பிரதிவாதி மோகன்ராஜும் நண்பர்கள் என்றால் சரிதான். பிரதிவாதி எந்த தேதியல் என்னிடம் பணம் கேட்டார் என்றால் 15.10.2021 அன்று ரூ.1,50,000/- கடன் கேட்டார். அன்றைய தினமே கடன் கொடுத்தேன். பிரதிவாதி காசோலையை 30.11.2023 என தேதி குறிப்பிட்டு 25.11.2023 அன்று என்னிடம் கொடுத்தார். நான் சொல்வது போல் பிரதிவாதி ஒரே தவணையில் ரூ.1,50,000/- கடன் வாங்கவில்லை என்றாலும் இரண்டு தவணைகளில் தலா ரூ.50,000/- மட்டுமே வாங்கினார் என்றால் சரியல்ல. பிரதிவாதி இரண்டு காசோசலைகள் கொடுத்தார். காசோலை எண்கள் 000141 -ல் ரூ.1,00,000/- த்திற்கும் 000148 ல் ரூ.50,000/-க்கும் கொடுத்தார். உண்மையில் பிரதிவாதி இரண்டு காசோலைகள் கொடுத்திருந்தால் காசோலை எண் தொடர்ச்சியாக உள்ளதை கொடுத்திருப்பார் என்றாலும் வெவ்வேறு தேதிகளில் என்னிடம் பிரதிவாதி காசோலை வழங்கியதால் எண்கள் தொடர்ச்சியாக இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ.1,00,000/- கடன் வாங்கியதை வட்டியும், முதலுமாக ரூ.75,000/- செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. மீதம் தொகை ரூ.25,000/- ஐ செலுத்த காலதாமதம் ஆனதால் தொகையை மிகைப்படுத்தி பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் வாதிகொடுத்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்புகொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுக்க வேண்டிய பாக்கி ரூ.25,000/-யும் என் வங்கி கணக்கில் செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் பாதுகாப்பிற்காக கொடுத்த கசோலையை வைதது வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.